## திருச்சிராப்பள்ளி, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குனரின் செயல்முறைகள்

**முன்னிலை:திரு.ஆ.ரவி,எம்இ.,எம்.பி.ஏ.,**

**சுருக்கம்**

பணிக்குழு – தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் - தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர் தேர்வாணையத்தால் தட்டச்சர் பதவிக்குத் தேர்வு – திருச்சிராப்பள்ளி, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குனர் - அலுவலகத்தில் - தட்டச்சராக நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை வழங்கி ஆணைகள் பிறப்பிப்பது – தொடர்பாக.

---

அ/3233/2014

நாள்: 28 .09.2015

<u>படிக்கப்பட்டது :</u>

1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண். 5901/PSD-F/2014 நாள் : 13.08.2014
2. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஜி3/28178/14-02 நாள் : 04.09.2014
3. சென்னை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குனர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஓ1/24338/2014 நாள் : 08.09.2014

---------

ஆணை:

மேலே 1 முதல் 3 வரை படிக்கப்பட்ட கடிதம் மற்றும் செயல்முறை ஆணைகளின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி IVல் அடங்கிய தட்டச்சர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட செல்வி. ப.வனஜா அவர்கள் 15.09.2014 முற்பகல் தொடக்கம் தட்டச்சராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

மேற்கண்ட செல்வி. ப.வனஜா அவர்கள் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதி.23(அ)ன் கீழ் 15.09.2014 முற்பகல் தொடக்கம் அவரது பணிவரன்முறை செய்து ஆணைகள் வழங்கப்படுவதுடன் இவர் பணிவரன் முறைப்படுத்தப்பட்ட நாள் முதல் தொடர்ச்சியாக மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

Scanned by CamScanner

மேற்கண்ட தட்டச்சர் தமது தகுதிகாண் பருவகாலத்தில் தமிழ்நாடு அரசு நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும், எனவும் பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சியிலும் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

28/9/15

இணை இயக்குனர்,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
திருச்சிராப்பள்ளி.

28/9/15

**பெறுநர்:**
செல்வி. ப.வனஜா,
தட்டச்சர்,
இணை இயக்குனர்,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார அலுலகம்,
திருச்சிராப்பள்ளி.

**நகல் பணிந்தனுப்பப்படுகிறது:**

1. தொழிலாளர் ஆணையர் - சென்னை.
2. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குனர் - சென்னை.
3. தொழிலக பாதுகாப்பு மற்றம் சுகாதார கூடுதல் இயக்குனர், திருச்சிராப்பள்ளி.

**நகல்** -

1. பணிப்பதிவேடு
2. உதிரி

Scanned by CamScanner